10th July 1962]

THE HON. SRI R. VENKATARAMAN: (*a*) There is no sufficient response from the Industrialists for the Industrial Housing Scheme.

(*b*) No specific reasons have been adduced by the employers.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : பெரிய தொழிற்சாலைகளில் வேலை பார்க்கிற தொழிலாளர்களின் நலனைப் பாதுகாக்க வேண்டியது அந்தத் தொழில் அதிபர்களுடைய கடமையாகும் என்பதைச் சர்க்கார் உணருகிறார்களா ? இந்த திட்டத்தை அவர்கள் ஊக்குவித்தால் அது நல்ல முறையில் தொழிலாளர்களுக்கு பயன்படும் என்பது அரசியலாருக்குத் தெரியுமா ? ஆகவே இப்படிப்பட்ட வீடு கட்டும் திட்டத்தைப் பயன்படுத்தித் தொழிலாளர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கும்படியான நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ளும்படி அவர்களுக்குச் சொல்ல அரசாங்கம் முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன். அந்த முறையில் தொழிலாளர்களுக்கு வீடுகளைக் கட்டிக் கொடுக்கும்படியாக தொழில் அதிபர்களுக்கு அரசாங்கம் ஒரு சுற்றறிக்கை விடுவார்களா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்ராமன் : ஒரு சுற்றறிக்கை மாத்திரம் அல்ல. மூன்று அல்லது நான்கு மாநாடுகளை நடத்தியிருக்கிறேன். தொழிலாளர்களுடைய பிரதிநிதிகள் முதலாளிகள் எல்லோரையும் அழைத்து வீடுகள் கட்டிக்கொடுக்கவேண்டிய அவசியத்தையும் அது அவர்களுடைய கடைமையும் என்பதைப்பற்றி விளக்கிச் சொல்லப்பட்டிருக்கிறது. அந்த விதத்தில் மூன்று மாநாடுகள் நடத்தினேன். ஒரு மாநாட்டில் முதலாளிகள் என்ன சொன்னார்கள் என்றால் இப்படி வீடுகள் கட்டிக்கொடுத்தால் அவைகளைத் தனி "அசெட்ஸ்" என்று வைத்துக்கொள்ளுகிறார்கள். அதனால் வருமான வரியில் ரிபேட் வருவது இல்லை என்று சொன்னார்கள். அதைப் பற்றி மத்திய சர்க்காருக்கு எழுதி தொழிலாளர்களுக்கு வீடுகள் கட்டிக்கொடுத்தால் அதை "பிசினஸ் அசெட்ஸாக" கருதக்கூடாது என்றும் அதற்கு வேண்டிய "டிப்ரிசியேஷன் அலவன்சு" கொடுக்க வேண்டுமென்ற சலுகைகளை வாங்கிக் கொடுத்தோம். அப்படியும் அவர்கள் வீடுகள் கட்டிக் கொடுக்கவில்லை. அதற்கு அடுத்தபடியாக ஒரு புதிய யோசனை சொல்லப்பட்டது. அதாவது 25 சதவீதம் முதலாளிகள் போட்டுக் கட்டினால் பாக்கியை சர்க்காரே போட்டுக் கட்டிக்கொடுப்பது என்று முடிவு செய்யப்பட்டது. இப்படிப்பட்ட ஒரு யோசனையையும் சொல்லி இருக்கிறோம். அதை ஏற்றுக்கொண்டு அவர்கள் வீடுகளைக் கட்டிக்கொடுக்க முன் வருவார்கள் என்று நம்புகிறேன்.

தண்ணீர் போர்டும், சாக்கடை வசதி போர்டும் அமைத்தல்

* 216 **கேள்வி.—திரு. ஜே. மாதா கவுடர் :** கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) நம் மாநிலத்தில் தண்ணீர் போர்டும், சாக்கடை வசதி போர்டும் ஏற்படுத்த உத்தேசமுண்டா ?

(இ) அப்படியானால், ஏற்படுத்துவதன் அவசியமென்ன ?

T :1 H¶fl. Sx)&32 :) JOTHI VENCATACHELLUM : (அ) No, Sir.

(இ) Does not arise.

Iron deposits in Karaikudi

* 217 *Q.*—SRI K. MOOKIAH THEVAR : } Will the Hon. the
SRI A. K. SUBBIAH ! }
Minister for Industries be pleased to state—

(*a*) whether the Government have received any report from the Geological Survey of India on the availability of iron ore in Karaikudi ; and